Ours bank with
Bank of Baroda

மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)

2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு	*மணி 55	* ஓசை	313	உள்ளூர் - 13.11.2026	வெள்ளிக்கிழமை	விலை ரூ.4/-	பக்கங்கள்-4	Website : http://maduraimaninews.com
Madurai Edition	*Vol 55	* Issue	313	வெளியூர் - 14.11.2026	சனிக்கிழமை	Price Rs. 4/-	Pages -4	Email: maduraimaninews@gmail.com

12 ராசிகளின் கார்த்திகை பலன்கள்!

பெட்ரல், சவுத் இந்தியன் வங்கிகளில் வேலை!

அனிருத்-காவ்யா திருமணம்: ₹100 கோடியா?

உருவான காற்றழுத்தம்! உருவாகும் 'அக்வான்'?

அமித் ஷாவிடம் ஆளுநர் ஆர்லேகர் அறிக்கை!

புதுடெல்லி, நவ. 13–

டெல்லி சென்றுள்ள தமிழக ஆளுநர் அர்லேகர், மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை நேரில் சந்தித்து ஆலோசனை நடத்தி வருகிறார். இந்தச் சந்திப்பின்போது, இருவரும் 45 நிமிடக்களாக பேசிவருவதாகவும் தமிழ்நாட்டின் தற்போதைய சட்டம் – ஒழுங்கு நிலவரம் குறித்த அறிக்கையை மத்திய உள்துறை அமைச்சரிடம் ஆளுநர் சமர்ப்பித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.



பள்ளி மாணவர்களுக்கு கேக்!

சென்னை, நவ. 13–

நவம்பர் 14 ஆம் தேதியில் குழந்தைகள் நாள் கொண்டாடப்படவுள்ள நிலையில், நவ. 13–ல் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்க தமிழக அரசு உத்தரவிட்டது. அரசுப் பள்ளிகளில் 61,84,566 மாணவர்களுக்கு கேக் வழங்கு வதற்காக தமிழக அரசு சார்பில் ரூ.9.27 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்த நிலையில், சென்னை கொளத்தூரில் உள்ள அரசுப் பள்ளிக்கு நேரில் சென்று மாணவர்களுக்கு கேக் முதல்வர் விஜய் இனிப்புகள் வழங்கினார். தொடர்ந்து, குழந்தைகளுக்கு வாழ்த்து அட்டைகளையும் முதல்வர் விஜய் வழங்கினார்.



நவம்பர் 14-ல் ரேஷன் அட்டை குறைதீர் முகாம்!

சென்னை, நவ. 13–

தமிழகம் முழுவதும் நவம்பர் 14ஆம் தேதி, சனிக்கிழமை, ரேஷன் அட்டை குறைதீர்ப்பு சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை பொதுமக்கள் பங்கேற்கலாம்.

ரேஷன் அட்டையில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்குதல், முகவரி மாற்றம், கைப்பேசி எண் புதுப்பித்தல் மற்றும் புதிய அட்டைக்கான விண்ணப்பம் உள்ளிட்ட சேவைகளுக்காக முகாமை அணுகலாம். பொது விநியோகத் திட்டம் தொடர்பான புகார்களையும் தெரிவிக்கலாம். சென்னையில் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 19 மண்டல உதவி ஆணையாளர் அலுவலகங்களிலும், பிற மாவட்டங்களில் சம்பந்தப்பட்ட வட்ட வழங்கல் அலுவலகங்களிலும் முகாம்கள் நடைபெறுவதாகச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரேஷன் கடைக்கு நேரில் செல்ல முடியாத மாற்றுத்திறனாளிகள், அங்கீகரிக்கப்பட்ட நபர் மூலம் பொருட்களைப் பெறுவதற்கான சான்று தொடர்பாகவும் முகாமில் அணுகலாம்.

ரேஷன் அட்டையில் திருத்தம் தேவைப்படுவோர், தங்கள் பகுதி முகாம் நடைபெறும் இடத்தை உறுதிப்படுத்திக்கொண்டு பங்கேற்கலாம்.



மின்வாரிய ஊழியர்களுக்கு நற்செய்தி!

சென்னை, நவ. 13–

தமிழ்நாடு மின்சார வாரிய ஊழியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை அல்லது குற்றவியல் வழக்குகள் நிலுவையில் இருந்தாலும், அவர்கள் ஓய்வு பெறும் நாளன்று பணியிடை நீக்கம் ரத்து செய்யப்பட்டு, உரிய நிலுவைத் தொகையைக் கழித்த பிறகு மீதமுள்ள ஓய்வூதியப் பணிக்கொடை வழங்கப்படும் என வாரியம் உத்தரவிட்டுள்ளது

இது தொடர்பாக தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைவரும், நிர்வாக இயக்குநருமான ராஜேஷ் லக்கானி வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் , பல்வேறு விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. வாரியத்தில் ஒழுங்கு நடவடிக்கைகள் அல்லது குற்றவியல் வழக்குகள் நிலுவையில் இருக்கும்போதே ஓய்வு பெறும் வயதை எட்டி பணி ஓய்வு பெற அனுமதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய இறப்பு மற்றும் ஓய்வூதிய பணிக்கொடைத் தொகையை முழுமையாக நிறுத்தி வைப்பதற்குப் பதிலாக, அவர்களிடமிருந்து வசூலிக்க வேண்டிய குறிப்பிட்ட தொகையை மட்டும் பிடித்தம் செய்துவிட்டு மீதமுள்ள தொகையை விடுவிக்குமாறு கோரிக்கைகள் பெறப்பட்டு வந்தன.

இக்கோரிக்கைகள் குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டு தற்போதைய முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, குற்றவியல் புகார் விசாரணை நிலுவையில் உள்ள ஊழியர்கள் பணியிலிருந்து ஓய்வு பெறுவதற்கு ஏதுவாக, அவர்களின் பணியிடை நீக்க உத்தரவு அவர்கள் பணி ஓய்வு பெறும் தேதியன்றே ரத்து செய்யப்படும். மேலும், ஏற்கனவே பணியிடை நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களுக்கு, அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றும் குற்றவியல் வழக்குகள் முழுமையாக முடிவடைந்த பிறகே இறப்பு மற்றும் ஓய்வு கால பணிக்கொடைகள் வழங்கப்படும். ஏனைய வழக்குகளைப் பொறுத்தவரை, சம்பந்தப்பட்ட ஊழியர்களால் மின்வாரியத்திற்கு ஏதேனும் நிதி இழப்பு ஏற்பட்டிருந்தாலோ அல்லது வசூலிக்கப்படாத நிலுவைத் தொகை இருந்தாலோ, அவற்றைக் கழித்த பின்னர் எஞ்சிய ஓய்வூதிய பணிக்கொடைத் தொகை அவர்களுக்கு வழங்கப்படும் என அந்த உத்தரவில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.




அடையார் ஆனந்த பவனில் ரூ.1,690 கோடி முதலீடு! பெரும்பான்மைப் பங்குகளை வாங்குகிறது போதி ட்ரீ சிஸ்டம்ஸ்

சென்னை, நவ. 13–

சென்னையைத் தலைமையிடமாகக் கொண்ட அடையார் ஆனந்த பவன் (A2B) நிறுவனத்தின் பெரும்பான்மைப் பங்குகளை, ஜேம்ஸ் மார்டாக் மற்றும் உதய் சங்கர் ஆகியோரின் போதி ட்ரீ சிஸ்டம்ஸ் நிறுவனம் சுமார் ரூ.1,690 கோடிக்கு வாங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, A2B நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுத் தலைவராக உதய் சங்கர் பொறுப்பேற்க உள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. வடஇந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உணவகக்கிளைகளை விரிவுபடுத்துவது இந்த முதலீட்டின் முக்கிய நோக்கமாகும்.



திருப்பதி ராஜாவால் சிறிய பலகாரக் கடையாகத் தொடங்கப்பட்ட அடையார் ஆனந்த பவன், தென்னிந்தியச் சைவ உணவுகள் மற்றும் இனிப்பு வகைகளுக்குப் பெயர் பெற்ற நிறுவனமாக வளர்ந்துள்ளது. இந்தியா மட்டுமின்றி சிங்கப்பூர், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, மலேசியா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளிலும் செயல்பட்டு வருகிறது.

சமையல் கூடங்களை நவீனப்படுத்துதல், உற்பத்தித் திறனை உயர்த்துதல், டிஜிட்டல் வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் எதிர்காலத்தில் பங்குச் சந்தையில் பட்டியலிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றிலும் கவனம் செலுத்தப்பட உள்ளது. போதி ட்ரீ நிறுவனத்துடனான கூட்டணி, வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்குப் புதிய வாய்ப்புகளை உருவாக்கும் மைல்கல்லாக அமையும் என A2B நிர்வாகம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.


தமிழகம் முழுவதும் நூலகங்களில் இருந்து 70,674 போலி நூல்கள் அகற்றம்!

சென்னை, நவ. 13–

கடந்த திமுக ஆட்சியில் கட்டப்பட்டு சமீபத்தில் முதல்வர் விஜய்யால் திறக்கப்பட்ட கோவை காந்திபுரம் பெரியார் அறிவுலகத்தில் போலி நூலகள் இருப்பதாக எழுத்தாளர் பெருமாள் முருகன் வெளிக்கொண்டு வந்தார்.

இதையடுத்து இதுதொடர்பாக விசாரணை நடைபெற்று வருகிறது.

இதனிடையே கோவை பெரியார் நூலகத்தில் அகல் விளக்கு, பீனிக்ஸ் ஆகிய பதிப்பகத்தின் 1,000 –க்கும் மேற்பட்ட போலி நூல்கள் அகற்றப்பட்டன.



தொடர்ந்து தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள நூலகங்களிலும் போலி நூல்கள் கண்டறியப்பட்டு அகற்றப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் தமிழ்நாட்டில் இதுவரை 70,674 போலி நூல்கள் அகற்றப்பட்டுள்ளதாக நூலகத் துறை தரப்பில் தகவல் வெளியாகியுள்ளது.


தொடர்ந்து போலி புத்தகங்களைக் கண்டறியும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

கர்நாடகத்தில் மோடி!

ரூ.15,600 கோடி திட்டங்கள்! பிங்க் மெட்ரோ சேவை தொடக்கம்!

வந்தே பாரத் ரயில் கொடியசைப்பு!!





பெங்களூரு, நவ.13–

கர்நாடகத்தில் ஒருநாள் பயணம் மேற்கொள்ளும் பிரதமர் நரேந்திர மோடி, ரூ.15,600 கோடிக்கும் அதிகமான வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். பெங்களூரு இளஞ்சிவப்பு மெட்ரோ வழித்தடத்தில், கலேனா அக்ரஹாரா முதல் தாவரகெரே வரையிலான 7.5 கிலோமீட்டர் உயர்மட்டப் பாதையைத் திறந்து வைத்தார்.

பின்னர், தாவரகெரே நிலையத்திலிருந்து ஐஐஎம் பெங்களூரு நிலையம் வரை மெட்ரோவில் பயணிக்கிறார். இத்திட்டம் ரூ.3,470 கோடியில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பெங்களூருமங்களூருமட்காவ் வந்தே பாரத் ரயில் சேவையையும் தொடங்கி வைத்தார். அம்ருத் பாரத் திட்டத்தில் புதுப்பிக்கப்பட்ட சாமராஜ்நகர், சிக்கமகளூரு, சக்லேஷ்புரா, சுப்ரமண்யா ரோடு ஆகிய நான்கு ரயில் நிலையங்களையும் திறந்து வைத்தார்.

மங்களூருவில் ரூ.850 கோடிக்கும் அதிகமான செலவில் அமைக்கப்பட்டுள்ள, 80,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட நிலத்தடி எல்பிஜி சேமிப்புக் கிடங்கை நாட்டுக்கு அர்ப்பணித்தார். தேவனகொண்டி எரிபொருள் முனையம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கான மின்பரிமாற்றத் திட்டங்களும் தொடங்கப்பட்டன.. கொப்பள் 2, கதக் 2 எரிசக்தி மண்டலங்களுக்கான ரூ.4,450 கோடி மின்பரிமாற்றத் திட்டமும், பீதர் சூரிய மின்சக்தி மண்டலத்துக்கான ரூ.1,370 கோடி திட்டமும் இதில் இடம்பெறுகின்றன. தாவணகெரே, சித்ரதுர்கா, பெல்லாரி பகுதிகளுக்கான புதிய மின்பரிமாற்றக் கட்டமைப்புகளுக்கும் அடிக்கல் நாட்டப்பட்டது.

பிரசாந்தி குடீரத்தின் பொன்விழா மற்றும் எச்.வி. சேஷாத்ரியின் பிறந்தநாள் நூற்றாண்டு நிகழ்ச்சியில் பங்கேற்கும் பிரதமர், நிர்வாகக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி திருவனந்தபுரம் கல்வி மையத்தையும் தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து மைசூருவில் பாரத் வனத்தில் மரக்கன்று நடும் நிகழ்ச்சியில் பங்கேற்று,காஸ்மோஸ் கோளரங்கத்தைத் திறந்து வைத்தார். பிரதமரின் வருகையையொட்டி பெங்களூரு, மைசூருவில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இந்தத் திட்டங்கள் நகரப் போக்கு வரத்து, கடலோர ரயில் இணைப்பு, எரிபொருள் சேமிப்பு மற்றும் பசுமை மின்சாரப் பரிமாற்ற வசதிகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. வந்தே பாரத் சேவை மூலம் பெங்களூரு, கடலோர கர்நாடகம் மற்றும் கோவா இடையிலான பயண வசதிகள் மேம்படும்.

ஓய்வுபெற்ற நீதிபதி சி.எஸ்.கர்ணன் காலமானார்!



சென்னை,நவ.13–

சென்னை மற்றும் கொல்கத்தா உயர் நீதிமன்றங்களில் நீதிபதியாக பதவி வகித்து ஓய்வுபெற்ற நீதிபதி சி.எஸ்.கர்ணன் உடல் நலக்குறைவு காரணமாக இயற்கை எய்தினார்.

நவ. 13

நினைவஞ்சலி



அறத்தமிழின் ஒளிச்சுடர் — மணிமொழியனார்

திருக்குறள் செம்மல் ந. மணிமொழியனார் நினைவேந்தல்

சிலர் வாழ்ந்து மறைகிறார்கள்; சிலர் வாழ்வின் பொருளாக நிலைக்கிறார்கள். திருக்குறள் செம்மல் ந. மணிமொழியனார், அறத்தைச் சொல்லில் மட்டுமன்றி வாழ்விலும் ஒளிரச் செய்த பண்பாளர்.

அவரது மொழியில் தமிழின் இனிமையும், பழகும் முறையில் மனிதநேயத்தின் கனிவும், தழைத்தன. குறள் நெறியை நெஞ்சில் ஏந்தி, தமிழ்ப் பணியைத் தம் வாழ்வின் தவமாகக் கொண்டவர் அவர்.


அவர் மறைந்தாலும், அவர் விதைத்த அறமும் பகிர்ந்த அன்பும் மறைவதில்லை. அவரது நினைவைப் போற்றுவது, அவர் காட்டிய நன்னெறியில் நடப்பதே!

ஆசிரியர்

மதுரை மணி நாளிதழ் / நியூ இந்தியா பிளாஷ்

தலையங்கம்
மதுரை மணி
வெள்ளிக்கிழமை 13.11.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஐப்பசி மாதம் 27-ம் தேதி

கழிவாகும் மின்கலங்கள்; கைநழுவக் கூடாத கனிம வளம்!



ஒரு நாட்டின் வளம் அதன் மண்ணுக்கடியில் மட்டுமே புதைந்து கிடப்பதில்லை. பயன்படுத்திவிட்டுத் தூக்கியெறியும் பொருள்களிலும் பொதிந்திருக்கிறது. இந்தியாவின் மின்கலக் கழிவுகளில் அடங்கியுள்ள லித்தியம் உள்ளிட்ட முக்கியக் கனிமங்கள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. அவற்றை வெறும் குப்பையாகக் கருதுகிறோமா, நாளைய பொருளாதாரத்தின் மூலதனமாகக் கருதுகிறோமா என்பதில்தான் நமது தொலைநோக்கு வெளிப்படுகிறது.

பயன்பாடிழந்த லித்தியம் அயனி மின்கலங்களையும், மின்கலத் தொழிற்சாலைக் கழிவுகளையும் நொறுக்கும்போது கிடைக்கும் கனிமங்கள் நிறைந்த கருந்தூள், 'பிளாக் மாஸ்' எனப்படுகிறது. இந்தியாவில் உருவாகும் இந்தக் கருந்தூளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு வெளிநாட்டு வர்த்தகத் தலைமை இயக்குநரகம் விதித்துள்ள தடை, வரவேற்கத்தக்க முடிவு. தாமதமாக எடுக்கப்பட்டிருந்தாலும், தவறான பொருளாதார முரண்பாட்டைச் சரிசெய்யும் நடவடிக்கை இது.

ஒருபுறம், மூலப்பொருள் பற்றாக்குறையால் உள்நாட்டு மறுசுழற்சி ஆலைகள் தமது முழுத் திறனுக்கும் இயங்க முடியாத நிலை. மறுபுறம், அதே ஆலைகளுக்குத் தேவையான கனிமக் கழிவுகளை வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்கும் நடைமுறை! சில மறுசுழற்சி நிறுவனங்கள் தங்கள் தேவைக்காக வெளிநாடுகளிலிருந்து மூலப்பொருளை இறக்குமதி செய்ய வேண்டியிருந்ததாக வர்த்தக அமைச்சகமே தெரிவித்துள்ளது. நமது வளத்தை வெளியே அனுப்பிவிட்டு, நமது தேவைக்கு வெளியே கையேந்துவது எத்தகைய கொள்கை?

மறுசுழற்சித் திறனை விரிவுபடுத்துவதற்காக, 2025 செப்டம்பரில் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்த திட்டத்தின் கீழ் ₹1,500 கோடி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், இந்த முரண்பாடு மேலும் உறுத்துகிறது. ஆலை அமைக்க நிதி வழங்கிவிட்டு, அந்த ஆலைக்குத் தேவையான மூலப்பொருள் வெளியேற அனுமதிப்பதில் என்ன பொருளாதார அறிவு இருக்க முடியும்? சுரங்கம் தோண்டாமலேயே நமக்குக் கிடைத்த லித்தியத்தின் ஆதாரத்தைத்தான் இதுவரை ஏற்றுமதி செய்துகொண்டிருந்தோம்!

முக்கியக் கனிமங்கள் இன்று தொழிற்சாலைகளின் தேவையாக மட்டுமில்லை; நாடுகளின் வியூக வலிமையை நிர்ணயிக்கும் கருவிகளாகவும் மாறியுள்ளன. அவற்றைக் கொண்டிருக்கும் கழிவுகளும் அதே முக்கியத்துவத்தைப் பெற்றுவிட்டன. உலகின் மின்கலக் கழிவு முன்செயலாக்கத் திறனில் நான்கில் மூன்றுக்கும் அதிகமான பங்கையும், அவற்றிலிருந்து பொருள்களை மீட்டெடுக்கும் திறனில் 90 விழுக்காட்டையும் சீனா கொண்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றியமோ, கருந்தூளைத் தனது பொருளாதாரச் சுழற்சிக்குள்ளேயே தக்கவைக்கும் நோக்கத்துடன், 2025 மார்ச்சில் அதனை அபாயகரமான கழிவாக வகைப்படுத்தியது. உலகம் கழிவிலும் வளத்தைப் பார்க்கும்போது, இந்தியா மட்டும் அலட்சியமாக இருக்க முடியாது.

ஆனால், ஏற்றுமதிக்குத் தடை விதித்துவிட்டதாலேயே பணி முடிந்துவிடாது. வெளிநாட்டு வாங்குபவர்கள் விலகும்போது, உள்நாட்டு மறுசுழற்சி நிறுவனங்கள் கருந்தூளுக்குக் கொடுக்கும் விலை குறையக்கூடும். அதன் விளைவாகக் கழிவுகளைச் சேகரிப்போரின் வருவாயும், சேகரிப்பதற்கான ஊக்கமும் பாதிக்கப்படலாம். இந்த அபாயத்தை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். சேகரிப்பு வலையமைப்பை வலுவிழக்கச் செய்யும் விலைச்சரிவு ஏற்பட்டால், தடையின் நோக்கமே சிதைந்துவிடும்.

இதற்குத் தீர்வு, ஏற்றுமதிக் கதவை மீண்டும் திறப்பதல்ல. நியாயமான விலை கிடைக்கும் வெளிப்படையான சந்தை நடைமுறை, எளிதான சேகரிப்பு வசதி, உரிமம் பெற்ற ஆலைகளுடன் உறுதியான இணைப்பு ஆகியவற்றை உருவாக்குவதே தீர்வு. அதேவேளையில், இந்திய மறுசுழற்சி நிறுவனங்களும் பெரிய அளவில் லித்தியத்தைத் திறம்பட மீட்டெடுக்கும் ஆற்றலை நிரூபிக்க வேண்டும். அரசின் பாதுகாப்பு, தொழில்துறையின் செயல்திறனுக்கு மாற்றாகிவிடக் கூடாது.

வீட்டு இழுப்பறைகளில் முடங்கிக் கிடக்கும் பழைய மின்கலங்களையும், ஒதுக்கப்பட்ட மின்னணுச் சாதனங்களில் சிக்கியுள்ள மின்கலங்களையும் அங்கீகரிக்கப்பட்ட மறுசுழற்சி மையங்களுக்குக் கொண்டுசேர்ப்பதுதான் அடுத்த பெரும் பணி. உள்ளாட்சி அமைப்புகள், உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள், மறுசுழற்சி நிறுவனங்கள் ஆகிய அனைத்துத் தரப்பினரும் இதில் பொறுப்பேற்க வேண்டும். மக்கள் பாதுகாப்பாகவும் எளிதாகவும் ஒப்படைக்க வழியில்லாமல், கழிவிலிருந்து வளம் மீட்பது பற்றிப் பேசுவதில் பயனில்லை.

இந்தியாவில் அறிவிக்கப்பட்டுள்ள மறுசுழற்சித் திறன், 2040ஆம் ஆண்டில் நாட்டில் உருவாகும் மின்கலக் கழிவுகளில் பத்தில் ஒரு பங்கை மட்டுமே கையாளக்கூடியதாக இருக்கும் எனச் சர்வதேச எரிசக்தி முகமை மதிப்பிட்டுள்ளது. தேவைக்கும் தயார்நிலைக்கும் இடையிலான இடைவெளி எவ்வளவு பெரியது என்பதை இந்தக் கணிப்பே உணர்த்துகிறது. மீட்டெடுக்கப்படும் லித்தியம் மீண்டும் மின்வாகனங்களுக்கும், புதிய மின்கலங்களுக்கும், மின்சேமிப்புக் கட்டமைப்புகளுக்கும் பயன்பட வேண்டும். புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் வளர்ச்சிக்கும் அது துணையாக வேண்டும்.

ஏற்றுமதியைத் தடுப்பது முதல் அடி. ஒவ்வொரு பயன்பாடிழந்த மின்கலத்தையும் தேசிய வளமாக மீட்டெடுப்பதே முழுமையான வெற்றி. கழிவை வெளியேற்றும் நாடாக அல்லாமல், கழிவிலிருந்து வளம் உருவாக்கும் நாடாக இந்தியா உயர வேண்டும்!

ஆசிரியர்
மதுரை மணி

போலீஸ் நண்பர்கள் குழு; முதல்-அமைச்சர் விஜய் ஆலோசனை!

சென்னை, நவ. 13–

சட்டம்–ஒழுங்கு தொடர்பாக அதிகாரிகளுடன் முதல்–அமைச்சர் விஜய் நேற்று தலைமை செயலகத்தில் ஆலோசனை நடத்தினார். இதில் சட்ட அமைச்சர் நிர்மல்குமார், தலைமை செயலர் சாய்குமார், உள்துறை செயலர் கார்த்திக், டி.ஜி.பி., மகேஷ்குமார் அகர்வால், சிறைத்துறை கூடுதல் டி.ஜி.பி., சங்கர், சென்னை மாநகர கமிஷனர் அமல்ராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர். அப்போது அதிகாரிகள் முதல்–அமைச்சரிடம், 'தமிழகத்தில் காவலர்கள் பற்றாக்குறை உள்ளது.



அனைத்து மாவட்டங்களிலும், கூடுதல் பணிச்சுமையில் காவலர்கள் உள்ளனர். காவலர்கள் எண்ணிக்கையை அதிகரித்தால், பிரச்சினையை சமாளிக்க முடியும்' என்று தெரிவித்தனர்.

போலீசாரை பணிக்கு எடுத்து, அவர்களுக்கு பயிற்சி வழங்கி, ஆயுதப்படையில் சேர்ப்பதற்கு ஓராண்டுக்கு மேல் தேவைப்படும் என்பதால், தற்போதுள்ள நிலைமையை சமாளிப்பதற்கு, சட்டம்–ஒழுங்கு பணியில் ஈடுபடும் போலீசாருக்கு உதவும் வகையில், போலீஸ் நண்பர்கள் குழுவை மீண்டும் உருவாக்குவது குறித்து அதிகாரிகளுடன் முதல்–அமைச்சர் விஜய் இக்கூட்டத்தில் ஆலோசனை நடத்தி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

முதல்வர் விஜய்யின் 6 மாத ஆட்சியில் 112 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், ரூ. 1.14 லட்சம் கோடி முதலீடுகள்: அமைச்சர் கீர்த்தனா!

சென்னை, நவ. 13–

தவெகவின் 6 மாதகால ஆட்சியில் ரூ. 1.14 லட்சம் கோடி மதிப்பிலான 112 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளதாக தொழிற்துறை அமைச்சர் கீர்த்தனா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அமைச்சர் கீர்த்தனா வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது, தவெக ஆட்சி அமைந்த மே மாதம் முதல் 112 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு, ரூ. 1.14 லட்சம் கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 1,32,771 பேருக்கு



வேலைவாய்ப்பு கிடைக்கும். இந்த 112 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் 83 ஒப்பந்தங்கள் திட்டங்களாக மாற்றப்பட்டு அடுத்தகட்ட செயல்பாடுக்கு வந்துள்ளதால் ரூ. 59,485 கோடி முதலீடு உறுதியாகியுள்ளது.

ஜவுளி, ஆட்டோமொபைல், உற்பத்தித் துறை, எலக்ட்ரானிக்ஸ், மருந்துகள், விண்வெளி மற்றும் பாதுகாப்பு, உள்கட்டமைப்பு, சுகாதாரம் உள்பட பல துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முதலீட்டாளர்களின் நம்பிக்கைக்குரிய இடமாக தமிழ்நாடு மாறி வருகிறது. முதல்வர் விஜய் தலைமையிலான ஆட்சியின்கீழ், தமிழ்நாட்டின் தொழிற்துறை வளர்ச்சிப் பயணம் வேகமடைந்து வருகிறது என்று கூறியுள்ளார்.

வங்கக் கடலில் உருவாகிறதா 'அக்வான்' புயல்?

சென்னை, நவ. 13–

தெற்கு அந்தமான் கடல் பகுதியில் நிலவிய வளிமண்டல மேலடுக்கு சுழற்சி, வியாழக்கிழமை (நவ. 12) மத்திய அந்தமான் கடல் மற்றும் அதையொட்டிய பகுதிகளில் நிலவியது. இதன் தாக்கத்தால் வெள்ளிக்கிழமை (நவ.13) தென்கிழக்கு வங்கக் கடலில் காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவானது.

இது சனிக்கிழமை (நவ.14) ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாகவும், நவ.15–இல் தெற்கு வங்கக் கடலின் மத்திய பகுதியில் காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெற வாய்ப்புள்ளது.

இது, மேலும் வலுப்பெற்று நவ. 19 முதல் நவ. 25–ஆம் தேதிக்கு இடைப்பட்ட காலத்தில் தெற்கு வங்கக் கடலின் மத்திய பகுதியில் புயலாக உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. புயல் உருவாகுமேயானால், இந்த புதிய புயலுக்கு ஈரான் பரிந்துரைத்துள்ள 'அக்வான்' என பெயரிடப்படும். அக்வான் என்றால் 'அசுரன்' என்று பொருள். இந்தப் புயல் சின்னம் நகரும் திசை மற்றும் கரையைக் கடக்கும் பகுதியைப் பொருத்தே தமிழகத்தில் மழை பாதிப்பு இருக்கும்.

அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி உதவித்தொகைத் திட்டத்தில் தவெக அரசுக்கு ஏன் காழ்ப்பு? மு.க. ஸ்டாலின்!

சென்னை, நவ. 13–

அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி உதவித்தொகைத் திட்டத்தில் பயிலும் மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்காமல் அலைக்கழிப்பதாக தவெக அரசு மீது திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து முன்னாள் முதல்வர் திமுக தலைவருமான மு.க. ஸ்டாலினின் எக்ஸ் பக்கத்தில் தெரிவித்திருப்பதாவது, "அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் மீது தவெக அரசுக்கு ஏன் காழ்ப்பு? உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்த பின்னரும் கல்விக் கட்டணத்



தொகையை விடுவிக்காமல் மாணவர்களை அலைக்கழித்து மன உளைச்சலுக்கு ஏன் உள்ளாக்குகிறீர்கள்?

இந்தக் கல்வியாண்டில், வெளிநாட்டுக் கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்ற 164 மாணவர்களில் 65 பேருக்கு மட்டுமே இதுவரை உதவித்தொகை விடுவிக்கப்பட்டு இருப்பதாக ஆர்டிஐ மூலம் பெறப்பட்ட பதிலில் அம்பலம் ஆகியுள்ளது. மீதமுள்ள அனைத்து மாணவர்கள் மீதும் என்ன பழி போட இந்த அரசு உத்தேசித்துள்ளது?

இப்படி மாணவர்களை வதைத்தால், இனி இந்தத் திட்டத்தை நம்பி எப்படி பட்டியல், பழங்குடியின மாணவர்கள் தங்கள் அயலக உயர்கல்விக் கனவை நோக்கி உழைப்பார்கள்?

திமுக அரசால் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்ட ஒரு நல்ல திட்டத்தைச் சிதைப்பதில் தவெக அரசுக்கு ஏன் இத்தனை வெறி? துறையின் பெயரில் சேர்த்த சமூகநீதியை நடைமுறையில் காணமுடியவில்லையே" என்று குறிப்பிட்டுள்ளார்.

கொள்ளையர்களின் கூடாரமாக தமிழகம்? மௌனம் கலைப்பாரா ரீல் முதல்வர்? இபிஎஸ் கடும் விமர்சனம்!

சென்னை, நவ. 13–

தமிழகத்தில் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகவும் குற்றவாளிகளை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தவெக அரசை அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

தனது சட்டப்பேரவை உறுப்பினர்களின் நடவடிக்கைகளை பற்றி இதுவரை மௌனம் கலைக்காதவர், தமிழ்நாடு இன்றைக்கு அமைதிப் பூங்காவாக இல்லாமல், கொள்ளையர்களின் கூடாரமாக மாறியிருப்பது குறித்தாவது தனது கள்ள மௌனத்தை கலைப்பாரா ரீல் முதல்வர்?

பொதுமக்களின் உயிருக்கும் உடைமைக்கும் எவ்வித பாதுகாப்பும் இல்லாமல், மாநிலத்தின் மூலைமுடுக்கெல்லாம் கொலை, கொள்ளை, வழிப்பறி சம்பவங்கள் நடப்பது அன்றாட நிகழ்வுகளாகிவிட்டன.

மதுரையில் பிரபல நகைக்கடை தனிஷ்க்–ல் 50 கோடி மதிப்புள்ள நகைகொள்ளை



காஞ்சிபுரத்தில் டாஸ்மாக் வசூல் பணம் 1.5 கோடி கொள்ளை

நெல்லையில் 70 வயது மூதாட்டியிடம் 13 பவுன் நகை கொள்ளையடித்த தவெக நிர்வாகி

விழுப்புரத்தில் பெண்ணின் கழுத்தில் கத்தியை வைத்து 16 சவரன் நகை கொள்ளை

திருவாரூரில் ஏழு பேராசிரியர்கள் வீட்டில் கொள்ளை

நாமக்கல் பள்ளிபாளையம் அருகே நள்ளிரவில் தெருவிளக்குகளை அணைத்து 7 வீடுகளில் கொள்ளை முயற்சி.. இப்படி தமிழ்நாடு முழுவதும் கொள்ளையர்களின் கை ஓங்கி, மக்கள் பயத்தின் பிடியில் உறைந்து போயிருக்கும்போதுகூட மௌன விரதத்தில் இருந்து கலைய மாட்டேன் என்றால் எப்படி?

நம்பிக்கையுடன் இருங்க நல்லதே நடக்கும் வெற்றி நிச்சயம் அப்படின்னு வசனம் பேசினீங்களே! இந்த வசனம் மக்களுக்கு சொன்னீங்களா? இல்ல குற்றவாளிகளுக்கு சொன்னீங்களா?

நீங்கள் சட்டம் ஒழுங்கு குறித்து ஆலோசனை நடத்தும் அதேநேரத்தில் தான் இங்கே பல குற்றச்சம்பவங்கள் நடந்துள்ளன.

ஆட்சிக்கு வருவதற்கு முன்பு மேடைக்கு மேடை மக்கள் பாதுகாப்பு பற்றி அடுக்குமொழியில் பேசிய ரீல் முதல்வர் அவர்களே! உங்கள் செயல்பாடுகள் எல்லாம் சினிமா கேமரா முன்னால் மட்டும்தானா?

எனவே இனியாவது கும்பகர்ண தூக்கத்தில் இருந்து விடுபட்டு, உடனடியாக இந்த கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட குற்றவாளிகளை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கி மக்களின் பாதுகாப்பினை உறுதி செய்ய வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.


தென்கிழக்கு வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி! மீனவர்களுக்கு எச்சரிக்கை!

சென்னை, நவ. 13–

தென்கிழக்கு வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவானது.

தென்கிழக்கு வங்கக் கடலில் அந்தமான் கடல் மற்றும் அதனை ஒட்டிய அந்தமான நிகோபார் தீவுகளில் நிலவிய வளிமண்டல மேலடுக்கு சுழற்சி, குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக உருவானது.

இது சனிக்கிழமை (நவ.14) ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாகவும், நவ.15–இல் தெற்கு வங்கக் கடலின்




மத்திய பகுதியில் காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெற வாய்ப்புள்ளது.

தாழ்வுப் பகுதியால் தென்கிழக்கு மற்றும் தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகளில் நவ. 16 வரையில் பலத்த காற்று வீசும். கடலில் சூறைக்காற்று அதிகமாக இருக்கும் என்பதால், மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

இது, மேலும் வலுப்பெற்று நவ. 19 முதல் நவ. 25–ஆம் தேதிக்கு இடைப்பட்ட காலத்தில் தெற்கு வங்கக் கடலின் மத்திய பகுதியில் புயலாக உருவாகும் பட்சத்தில், புயலுக்கு ஈரான் பரிந்துரைத்துள்ள அக்வான் என பெயரிடப்படும். மேலும், வடகிழக்கு பருவமழை காலத்தில் வங்கக் கடலில் உருவாகும் 3–ஆவது புயலாகவும் அக்வான் அமையும்.



12 ராசிகளின் கார்த்திகை பலன்கள்!



மேஷ ராசி (Aries): அஷ்டம ஸ்தானத்தில் சூரியன் சஞ்சரிப்பதால் வேலைச்சுமை மற்றும் திடீர் பொறுப்புகள் அதிகரிக்கும். நிதி நிலையில் ஏற்றத்தாழ்வுகள் வரலாம், எனவே முடிவுகளில் கூடுதல் கவனம் தேவை.

ரிஷப ராசி (Taurus): சூரியனின் சஞ்சாரம் நற்பலன்களைத் தரும். புதிய முயற்சிகளைத் தொடங்கவும், தொழில் மற்றும் வெளிநாட்டுப் பயணங்களுக்குச் சாதகமான காலம்.

மிதுன ராசி (Gemini): பேச்சாற்றல் மற்றும் தொடர்புகள் அதிகரிக்கும். வேலைவாய்ப்புகளில் ஊதிய உயர்வு அல்லது பதவி உயர்வு தொடர்பான நல்ல செய்திகள் கிடைக்க வாய்ப்புள்ளது.

கடக ராசி (Cancer): குடும்பப் பொறுப்புகளுக்கும் தனிப்பட்ட தேவைகளுக்கும் இடையே சமநிலையைப் பேண வேண்டிய மாதம். வரவு–செலவுகளில் கவனமாக இருக்க வேண்டும்.

சிம்ம ராசி (Leo): தலைமைப் பொறுப்புகள் மற்றும் தொழில் இலக்குகளில் அதிக கவனம் செலுத்த வேண்டிய நேரம்.

கன்னி ராசி (Virgo): சூரியன் விரய ஸ்தானத்தில் செல்வதால் எதிலும் அவசரப்படுவதைத் தவிர்க்க வேண்டும். தனிப்பட்ட திறமைகளைச் சரியாகத் திட்டமிட்டுப் பயன்படுத்தலாம்.

துலாம் ராசி (Libra): தன ஸ்தானத்தில் சூரியன் சஞ்சரிப்பதால் பேசும்போது நிதானம் தேவை. குடும்பத்திலும் பணியிடத்திலும் நல்லிணக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

விருச்சிக ராசி (Scorpio): சூரியன் உங்கள் ராசியில் சஞ்சரிப்பதால் துணிச்சலும் தனிப்பட்ட திறமைகளும் மேம்படும். நீண்டகாலத் திட்டங்களில் வெற்றி கிடைக்கும்.

தனுசு ராசி (Sagittarius): விரய ஸ்தானத்தில் சூரியன் இருப்பதால் மறைமுகச் செலவுகள் அல்லது அலைச்சல் அதிகரிக்கலாம். யோசனைகளில் சுய ஆய்வு தேவைப்படும்.

மகர ராசி (Capricorn): பொறுப்புகள் மற்றும் நீண்டகாலத் திட்டமிடலில் அதிக கவனம் செலுத்துவது நன்மை தரும். பணவரவில் சீரான தன்மை காணப்படும்.

கும்ப ராசி (Aquarius): சலம மற்றும் தசம ஸ்தான கிரக நிலைகளால் தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல லாபமும், புதிய வேலை வாய்ப்புகளும் தேடி வரும்.

மீனம் ராசி (Pisces): ஆன்மீக ஈடுபாடு மற்றும் புதிய அனுபவங்களில் ஆர்வம் அதிகரிக்கும். பயணங்களால் அனுகூலம் உண்டாகும்.

(குறிப்பு: ஜோதிட பலன்கள் கிரக நிலைகள் மற்றும் பொதுவான கணிப்புகளை அடிப்படையாகக் கொண்டவை. உங்கள் ஜாதக ரீதியான தசா–புத்தி நிலைகளுக்கு ஏற்ப பலன்களில் மாற்றங்கள் இருக்கலாம்).

தமிழக காவல்துறை அதிரடி! 3 நாள்களில் 1,049 ரௌடிகள் கைது!!



சென்னை, நவ. 13–

தமிழகத்தில் கடந்த 3 நாள்களில் 1,049 ரௌடிகளை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

மாநிலத்தில் சமீபமாக கொலை சம்பவங்கள் அதிகரித்து வருவதாகவும், சட்டம் – ஒழுங்கு சீர்குலைந்து வருவதாகவும் எதிர்க்கட்சிகள் கூறி வருகின்றன.

இதனிடையே, தீபாவளி திருநாளில் மட்டும் மாநிலத்தில் வெவ்வேறு இடங்களில் 9 பேர் கொலை செய்யப்பட்ட சம்பவங்கள் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதனைத் தொடர்ந்து, மாநிலத்தில் கொலை, கொள்ளை, போதைப் பொருள் கடத்தல் மற்றும் புழக்கம், குற்றச் சம்பவங்களில் ஈடுபடுவோர் மற்றும் ஈடுபட்டோர், சரித்திரப் பதிவேடு குற்றவாளிகள் தணிக்கை உள்ளிட்ட நடவடிக்கைகளில் காவல்துறையினர் தீவிரமாக களம் இறங்கினர்.

இந்த நிலையில், மாநிலத்தில் கடந்த 3 நாள்களில் மட்டும் காவல்துறையினர் மேற்கொண்ட தீவிர நடவடிக்கையில் 1,049 ரௌடிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

4 -வது நாளாகக் குறைந்த தங்கம் விலை!



சென்னை, நவ. 13–

தங்கம் விலை கிராமுக்கு ரூ. 120 குறைந்து ரூ. 12,695 –க்கும், சவரனுக்கு ரூ. 960 குறைந்து ரூ. 1,01,560 –க்கும் விற்பனையாகிறது. தங்கத்தின் விலை கடந்த 4 நாள்களில் ரூ. 4,480 குறைந்துள்ளது. இந்த நவம்பர் மாதத்தில் அதிகபட்சமாக தங்கம் விலை கடந்த நவ. 5 அன்று ஒரு சவரன் ரூ. 1,16,816 –க்கு விற்பனை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. சர்வதேச சந்தையில் தங்கத்தின் விலை குறைந்து வருவதே இதற்கு காரணம் என்று சொல்லப்படுகிறது.

வெள்ளி விலையும் இன்று குறைந்துள்ளது. கிராமுக்கு ரூ. 5 குறைந்து ஒரு கிராம் ரூ. 195 –க்கும், ஒரு கிலோ (கட்டி வெள்ளி) ரூ. 1.95 லட்சத்துக்கும் விற்பனையாகிறது.



தீபாவளி இனிப்பு... எடைக்கும் தேவை பொறுப்பு!



பண்டிகை விருந்தை ரசித்தபடியே உடல் எடையைக் கட்டுக்குள் வைக்க உதவும் எளிய பழக்கங்கள்

தீபாவளி என்றாலே பலகார மணமும், உறவுகளின் உபசரிப்பும் தனி மகிழ்ச்சிதான். "இன்னொரு லட்டு எடுத்துக்கோங்க" என்ற அன்பில், வழக்கத்தைவிட அதிகமாகச் சாப்பிட்டுவிடுவதும் உண்டு. அதற்காகக் குற்ற உணர்வுடன் பட்டினி கிடக்க வேண்டுமா? தேவையில்லை. அடுத்த வேளையிலிருந்தே உணவிலும் அன்றாடப் பழக்கங்களிலும் ஒழுங்கைக் கொண்டுவரலாம்.

இனிப்புக்கு ஒரு சிறிய இடம்!

பிடித்த இனிப்பைச் சிறிய அளவில் தனித் தட்டில் எடுத்துச் சுவையுங்கள். பெட்டியை அருகில் வைத்துக்கொண்டு பேசிக்கொண்டே சாப்பிடுவதைத் தவிர்க்கலாம். இனிப்புடன் காரம், பொரித்த பலகாரம், சர்க்கரைப் பானம் என அனைத்தையும் சேர்த்துக்கொள்ளும்போது மொத்த உணவளவு அதிகரித்துவிடும்.

விருந்துக்காக உணவைத் தவிர்க்காதீர்கள்

"மாலையில் விருந்து இருக்கிறது" என்று காலை, மதிய உணவுகளைத் தவிர்ப்பது அதிகப் பசியுடன் விருந்தில் அமரச் செய்யலாம். வழக்கமான நேரத்தில் அளவான உணவைச் சாப்பிடுங்கள். காய்கறிகள், பருப்பு, பயறு, முட்டை அல்லது உங்களுக்கு ஏற்ற புரத உணவுகளைச் சேர்த்துக்கொள்ளுங்கள்.

சாதத்தை முற்றிலும் நிறுத்த வேண்டாம்

இனிப்பு சாப்பிடுவதற்காகச் சாதம் உள்ளிட்ட உணவுகளை முழுவதுமாக விலக்கத் தேவையில்லை. தட்டில் காய்கறிகளுக்கு அதிக இடம் கொடுத்து, சாதம் அல்லது சப்பாத்தியையும் புரத உணவையும் அளவோடு சேர்க்கலாம். உணவின் சமநிலையும் மொத்த அளவுமே கவனிக்க வேண்டியவை.

தாகத்துக்குத் தண்ணீர்; பழத்தை மென்று சாப்பிடுங்கள்

விருந்தினர்களை வரவேற்க ஒவ்வொரு முறையும் இனிப்புப் பானம் குடிக்க வேண்டியதில்லை. தண்ணீரை முதன்மையாகத் தேர்ந்தெடுங்கள். பழச்சாறுக்குப் பதிலாக முழுப் பழத்தை அளவோடு எடுத்துக்கொள்ளலாம். எலுமிச்சை நீரோ, சிறப்புப் பானமோ தனியாக உடல் கொழுப்பைக் கரைத்துவிடாது.

குடும்பத்துடன் ஒரு நடை

பலகாரம் சாப்பிட்ட பிறகு நீண்ட நேரம் அமர்ந்திருப்பதற்குப் பதிலாக, வசதிக்கேற்ப சிறிது நேரம் நடக்கலாம். உறவினர்களுடன் பேசிக்கொண்டே நடப்பதும் நல்ல தொடக்கம். சாப்பிட்டதை ஈடுகட்ட வேண்டும் என்று திடீரெனக் கடுமையான உடற்பயிற்சியில் இறங்க வேண்டாம்; தொடர்ந்து செய்யக்கூடிய இயக்கத்தைத் தேர்ந்தெடுங்கள்.

மறுநாள் பட்டினி வேண்டாம்

"நேற்று அதிகமாகச் சாப்பிட்டுவிட்டோம்" என்று இன்று பழச்சாறு மட்டும் குடிப்பதோ, உணவை முற்றிலும் தவிர்ப்பதோ தேவையில்லை. வழக்கமான சமச்சீர் உணவுக்குத் திரும்புங்கள். நீடித்த எடைக் கட்டுப்பாட்டுக்கு உதவுவது தொடர்ச்சியான நல்ல பழக்கங்கள்தான்.

பலகாரத்துக்கும் திட்டம் போடுங்கள்

தேவையான அளவில் பலகாரம் தயாரியுங்கள் அல்லது வாங்குங்கள். கிடைத்த அனைத்தையும் உடனே சாப்பிட்டு முடிக்க வேண்டிய கட்டாயமில்லை. பாதுகாப்பாகச் சேமித்து, சிறிய அளவுகளாகப் பரிமாறுங்கள்; மீதமுள்ளவற்றைப் புதிதாக இருக்கும்போதே பகிர்ந்துகொள்ளுங்கள்.

தூக்கத்துக்கும் முக்கியத்துவம்

கொண்டாட்டம் முடிந்ததும் வழக்கமான தூக்க நேரத்துக்குத் திரும்ப முயலுங்கள். சீரான உணவு, அன்றாட இயக்கம், போதுமான தூக்கம் ஆகியவை இணைந்தால்தான் எடைக் கட்டுப்பாட்டு முயற்சி நிலைக்கும். சில நாள்களில் பல கிலோ குறைக்க வேண்டும் என்ற அவசர இலக்கு வேண்டாம். தீபாவளியின் மகிழ்ச்சி இனிப்பில் மட்டுமல்ல; குடும்பத்துடன் செலவிடும் நேரத்திலும் இருக்கிறது. சுவையை ரசிப்போம், அளவைக் கவனிப்போம், ஆரோக்கியமான பழக்கங்களைத் தொடர்வோம்! நீரிழிவு, சிறுநீரக நோய் போன்ற உடல்நலப் பிரச்னைகள் உள்ளவர்கள் உணவு அல்லது உடற்பயிற்சியில் பெரிய மாற்றம் செய்வதற்கு முன் தங்கள் மருத்துவர் அல்லது தகுதிபெற்ற உணவியல் நிபுணரிடம் ஆலோசனை பெற வேண்டும்.

தமிழகத்தின் 4 கடற்கரைகளுக்கு சர்வதேச 'நீலக்கொடி' அங்கீகாரம்: டென்மார்க் சுற்றுச்சூழல் அறக்கட்டளை அறிவிப்பு!

புதுடெல்லி, நவ,. 13–

தமிழகத்தில் உள்ள 4 கடற்கரைகளுக்கு சர்வதேச அளவில் மதிப்புமிக்க 'நீலக்கொடி' (Blue Flag) அங்கீகாரத்தை டென்மார்க் சுற்றுச்சூழல் கல்வி அறக்கட்டளை வழங்கியுள்ளது. இதில் கடலூர் வெள்ளி கடற்கரை, நாகை காமேஸ்வரம் கடற்கரை மற்றும் ராமநாதபுரம் அரியமான் கடற்கரை ஆகிய மூன்று கடற்கரைகளுக்கு முதல்முறையாக இந்த அங்கீகாரம் கிடைத்துள்ளது. மேலும், கோவளத்தில் உள்ள கடற்கரை தனது நீலக்கொடி அங்கீகாரத்தைத் தொடர்ந்து 6–ஆவது முறையாகத் தக்கவைத்துக்கொண்டு பெருமை சேர்த்துள்ளது.



தேனி மாவட்டம், சின்னமனூர் ஊராட்சி ஒன்றியம், முத்துலாபுரம் ஊராட்சியில் தமிழ்நாடு அரசின் திட்டங்கள், சாதனைகள் குறித்து செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

குடியிருப்புபில் பொது கழிப்பிட வசதி அமைத்து தர மனு!

ஒட்டன்சத்திரம் நவ. 13–

ஒட்டன்சத்திரம் தொகுதிக்கு உட்பட்ட புஷ்பத்தூர் ஊராட்சி அருந்ததியர் குடியிருப்பு பகுதிகளில் கழிப்பிடவசதி அமைத்து தர வேண்டும் எனதிருப்பாச்சியில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் துர்காமூர்த்தி அவர்களிடம் தமிழ் புலிகள் கட்சியின் முன்னால் மாவட்ட துணைச் செயலாளர் மு.கார்த்திக் (எ) வேம்பன் கோரிக்கை மனு அளித்துள்ளார்.

அம்மனுவில் மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது.

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட புஷ்பத்தூர் ஊராட்சியில் வசித்து வரும் சுமார் 100–க்கும் மேற்பட்ட அருந்ததியர் சமூகத்தினருக்கு போதிய கழிப்பிட வசதி இல்லாததால் திறந்த வெளியில் மலம் கழிப்பதால் எண்ணற்ற தீங்கு மற்றும் தொற்று நோய் ஏற்பட வாய்ப்புள்ளது.

எனவே புஷ்பத்தூர் அருந்ததியர் குடியிருப்பில் கழிப்பிட வசதி கட்டிடத்தை கட்டிதர துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

பழனி கந்தசஷ்டி திருவிழா ஆலோசனைக் கூட்டம்!



பழனி நவம்பர் 13–

பழனியில் கந்த சஷ்டி திருவிழாவை முன்னிட்டு, பழனி கோட்டாட்சியர் அலுவலகத்தில் கோட்டாட்சியர் பிரியங்கா தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் பழனி கோவில் நிர்வாக அதிகாரி ஹரிஹரன், போலீஸ் டிஎஸ்பி தேவராஜ், இன்ஸ்பெக்டர் தங்க முனியசாமி, தாசில்தார் சஞ்சய் காந்தி உள்பட அனைத்து துறை அதிகாரிகளும் பங்கேற்றனர். கூட்டத்தில் சூரசம்ஹார விழாவையொட்டி 400க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளதாக கூறப்பட்டது. நகராட்சி சார்பில் தூய்மை பணிகள் மேற்கொள்ளவும், ஆம்புலன்ஸ் தீயணைப்பு வாகனங்களை தயார் நிலையில் வைத்திருக்க அறிவுறுத்தப்பட்டது.

ஒட்டன்சத்திரம் பேருந்து நிலையம் வெளியேறும் பகுதியில் பள்ளம்

பேருந்துகள் செல்ல இடையூறு; சீரமைக்க பொதுமக்கள் கோரிக்கை!



ஒட்டன்சத்திரம், நவ. 13–

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து பேருந்துகள் வெளியேறும் பகுதியில் பள்ளம் ஏற்பட்டுள்ளது. இதனால் பேருந்துகள் அந்த வழியாகச் செல்வதில் சிரமம் ஏற்படுவதுடன், போக்குவரத்துக்கும் இடையூறு நிலவி வருகிறது.

மேலும், பள்ளத்தால் பேருந்துகள் மற்றும் இதர வாகனங்கள் விபத்தில் சிக்கும் அபாயமும் உள்ளது. எனவே, விபத்துகள் ஏற்படுவதற்கு முன்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுத்து, பள்ளத்தைச் சீரமைக்க வேண்டும் என பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பழனியில் நடைபெற்ற முத்தமிழ் முருகன் மகாநாட்டிலும் முறைகேடுகள் இந்து தமிழர் கட்சி நிறுவனர் ராம ரவிக்குமார் குற்றச்சாட்டு!

பழனி நவம்பர் 13–

பழனி திரு ஆவினன் குடி முருகன் கோவிலில், நேற்று இந்து தமிழர் கட்சி தலைவர் ராமரவிக்குமார் தலைமையில், திருப்பரங்குன்றம் தீபம் ஏற்றும் வழக்கில், வெற்றி பெற வேண்டும் என்று, பஞ்ச தீபம் ஏற்றி வழிபாடு நடைபெற்றது. அதன் பின்பு ராம ரவிக்குமார் கூறியதாவது. திருப்பரங்குன்றம் வழக்கு வெற்றிக்காக பக்தர்களும் வீடுகளில் விளக்கேற்றி வழிபாடு செய்ய வேண்டும். கடந்த அரசு அகல் விளக்கில் தீபம் ஏற்றாததால் தான், தற்பொழுது அகல் விளக்கு என்ற பதிப்பக புத்தக பிரச்சனையால், அவமானப் படுத்தப்பட்டுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பழனியில் முத்தமிழன் முருகன் மாநாடு நடந்தது. ஆனால் அந்த மாநாட்டிற்காக எவ்வளவு செலவு செய்யப்பட்டது. தனியாரிடம் எவ்வளவு நன்கொடை பெறப்பட்டது. என்ற கணக்கை அப்போதைய தமிழக அரசு சொல்லவில்லை. இது குறித்து சம்பந்தப்பட்ட துறை அலுவலருக்கு புகார் கொடுத்துள்ளோம் இவ்வாறு அவர் கூறினார்.

இன்ஸ்டாவில் 90 நிமிட வீடியோ... யூடியூப்புக்கு புதிய போட்டி!

புதுடெல்லி, நவ. 13–



குறுகிய ரீல்ஸ் வீடியோக்களுக்குப் பெயர்பெற்ற இன்ஸ்டாகிராம், நீண்ட நேர வீடியோக்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கத் தொடங்கியுள்ளது. 90 நிமிடங்கள் வரை வீடியோக்களைப் பதிவேற்ற அனுமதிக்கும் 'Features' வசதியை மெட்டா சோதித்து வருகிறது.

பிரேசிலில் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்பாளர்களிடம் நடத்தப்பட்ட சோதனை, தற்போது அமெரிக்காவிலும் குறிப்பிட்ட சில படைப்பாளர்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்த வசதி இன்னும் அனைத்துப் பயனர்களுக்கும் கிடைக்கவில்லை.

இதன் மூலம் பாட்காஸ்ட், நேர்காணல், பயணப் பதிவு, நகைச்சுவை நிகழ்ச்சி போன்ற நீண்ட படைப்புகளை இன்ஸ்டாகிராமிலேயே வெளியிட வாய்ப்பு உருவாகும். குறுகிய வீடியோக்கள் மூலம் ரசிகர்களை ஈர்க்கும் படைப்பாளர்கள், அவர்களிடம் விரிவான உள்ளடக்கத்தையும் கொண்டு சேர்க்க முடியும்.

நீண்ட நேர வீடியோக்களுக்கான இந்த முயற்சி, யூடியூப் உள்ளிட்ட தளங்களுடனான போட்டியை அதிகரிக்கக்கூடும். எனினும், இதனால் யூடியூப் அல்லது ஒடிடி தளங்களின் ஆதிக்கம் முடிவுக்கு வரும் என்று இப்போதே கூற முடியாது. பயனர்களின் வரவேற்பும், படைப்பாளர்களுக்குக் கிடைக்கும் பலன்களுமே இதன் வளர்ச்சியைத் தீர்மானிக்கும்.

இந்த வசதியில் கட்டணத் திரைப்படங்கள், ஒவ்வொரு பார்வைக்கும் கட்டணம் வசூலிக்கும் முறை அல்லது விளம்பர வருவாய்ப் பகிர்வு எப்படி அமையும் என்பது குறித்த முழுமையான அறிவிப்பு வெளியாகவில்லை.

இந்தியாவில் எப்போது?

இந்திய அறிமுகத்துக்கான உறுதியான தேதி இதுவரை அறிவிக்கப்படவில்லை. சோதனை முடிவுகளையும் மெட்டாவின் அடுத்தகட்ட அறிவிப்புகளையும் பொறுத்தே இந்தியப் பயனர்களுக்கான வசதி குறித்து தெளிவு கிடைக்கும்.

தேனி அரசினர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் மாவட்ட அளவிலான தொழிற்பழகுநர் சேர்க்கை முகாம்: கலெக்டர் தகவல்!

தேனி, நவ. 13–

மாவட்ட ஆட்சித்தலைவர் வ. சிவகிருஷ்ணமூர்த்தி செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

தேனி அரசினர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் மாவட்ட அளவிலான தொழிற்பழகுநர் சேர்க்கை முகாம் வருகின்ற நவம்பர்–16 ஆம் தேதி காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற உள்ளது.

இந்த முகாமில் தேனி மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் என 18 நிறுவனங்கள் கலந்து கொண்டு தொழிற்பழகுநர் பயிற்சிக்கு 1903 க்கும் மேற்பட்ட இடங்களை நிரப்ப உள்ளனர்.

இம்முகாமில் National Council for Vocational Training (NCVT) மற்றும் State Council for Vocational Training (SCVT) முறையில் உள்ள அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று தேர்ச்சி பெற்ற/பெறாத அனைத்து பயிற்சியாளர்களும் கலந்து கொள்ளலாம். தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்ந்து பயிற்சி பெற இயலாத 8, 10, 12 – ஆம் வகுப்பு மற்றும் அதற்குமேல் கல்வித்தகுதி உடையவர்கள் நேரடியாக தொழிற்சாலைகளில் சேர்ந்து 3 முதல் 6 மாதகால அடிப்படைபயிற்சி, ஓராண்டு தொழிற்பழகுநர் பயிற்சி (Apprenticeship Training) பெற்று தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழ் பெறலாம். இப்பயிற்சிக்கு மாத உதவித்தொகையும், பயிற்சி முடித்து சான்றிதழ் பெற்றவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமையும், ஓராண்டு வயது வரம்பு சலுகையும் உள்ளது.

எனவே, தொழிற்பழகுநர் பயிற்சி பெற ஆர்வமுள்ளவர்கள் இந்த முகாமில் தவறாது கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வ.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

சாலை பணி கிடப்பில் போட்டதை கண்டித்து பொதுமக்கள் போராட்டம்!



கரூர், நவ. 13–

கரூர் மாவட்டம் சின்ன ஆண்டாங்கோவில் பகுதியில் சாலை சீரமைப்புப் பணிகள் கிடப்பில் போடப்பட்டதைக் கண்டித்து அப்பகுதி பொதுமக்கள் திடீர் போராட்டம் நடத்தினர்.

கரூர் மாநகராட்சிக்கு உட்பட்ட சின்ன ஆண்டாங்கோவில் மேட்டுத் தெரு பகுதியில், கடந்த பல மாதங்களாக சாலை சீரமைப்புப் பணிகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. வளர்ச்சிப் பணிகளுக்காக தோண்டப்பட்ட சாலைகள் மீண்டும் சீரமைக்கப்படாததால், அப்பகுதி முழுவதும் குண்டும் குழியுமாகக் காட்சியளிக்கிறத

இதனால் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள், பள்ளி மாணவர்கள் மற்றும் வாகன ஓட்டிகள் தினந்தோறும் கடும் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர். வெயில் காலங்களில் புழுதிப் படலமும், மழைக்காலங்களில் சேறும் சகதியுமாக சாலை மாறுவதால் அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றன. இது குறித்து மாநகராட்சி நிர்வாகத்திடம் பலமுறை புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை

இதனால் ஆத்திரமடைந்த அப்பகுதியைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் ஒன்றுதிரண்டு, கரூர் ஆண்டாங்கோவில் கீழ்பாகம் ஊராட்சிக்கு உட்பட்ட சின்ன ஆண்டாங்கோவில் மேட்டுத் தெரு பகுதியின் சாலையில் அமர்ந்து திடீர் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த போராட்டத்தால் அப்பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள், போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். சாலை சீரமைப்புப் பணிகள் விரைவில் தொடங்கப்படும் என அதிகாரிகள் உறுதியளித்தனர். இதையடுத்து பொதுமக்கள் தங்களது போராட்டத்தைக் கைவிட்டுக் கலைந்து சென்றனர்.

வேலை வாய்ப்பு

சவுத் இந்தியன் வங்கியில் வேலைவாய்ப்பு 2026

விவரம்	தகவல்
வங்கி	சவுத் இந்தியன் வங்கி
பணியிடங்கள்	தயாரிப்புப் பிரிவுத் தலைவர் (Product Head), தயாரிப்பு மேலாளர் (Product Manager)
பணி வகை	நிரந்தரப் பணி
பணியிடம்	இந்தியா முழுவதும்
விண்ணப்பிக்கத் தொடங்கும் நாள்	06.11.2026
விண்ணப்பிக்கக் கடைசி நாள்	16.11.2026
விண்ணப்பிக்கும் முறை	ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்	சவுத் இந்தியன் வங்கி

ஃபெடரல் வங்கியில் வேலைவாய்ப்பு 2026

விவரம்	தகவல்
வங்கி	ஃபெடரல் வங்கி
பணியிடங்கள்	விற்பனை அதிகாரி (Sales Officer), பகுதி விற்பனை மேலாளர் (Area Sales Manager)
பணி வகை	நிரந்தரப் பணி
பணியிடங்கள் உள்ள நகரங்கள்	சென்னை, சேலம், கோயம்புத்தூர், அகமதாபாத், பெங்களூரு, சண்டிகர், டெல்லி NCR, குவாஹாட்டி, ஹைதராபாத், ஜெய்ப்பூர், கொல்கத்தா, மும்பை, நாசிக், புனே, ராஜ்கோட், சூரத்
விண்ணப்பிக்கத் தொடங்கும் நாள்	05.11.2026
விண்ணப்பிக்கக் கடைசி நாள்	23.11.2026
விண்ணப்பிக்கும் முறை	ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்	ஃபெடரல் வங்கி



தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் ஊராட்சி ஒன்றியம் திருப்பணிசெட்டிகுளம் ஊராட்சியில் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் சிறப்புத் திட்டங்கள் குறித்து செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் வைக்கப்பட்டிருந்த புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகில் காலி பணியிடங்கள்: கலெக்டர் தகவல்!

தேனி, நவ. 13–

மாவட்ட ஆட்சித்தலைவர் வ.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

தேனி மாவட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகில் காலியாக உள்ள மாவட்ட வளப்பயிற்றுநர் (மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்பு) (MCLF) பணிக்கு முற்றிலும் தற்காலிகமாக மதிப்பூதிய அடிப்படையில் பணிபுரிய தகுதியுடைய விண்ணப்ப தாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

மாவட்ட வளப்பயிற்றுநர் (மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்பு) (MCLF) பணிக்கு விண்ணப்பிக்க ஏதேனும் ஒரு துறையில் முதுகலைப்பட்டம் பெற்றிருக்க வேண்டும். தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வாசிப்பு மற்றும் எழுத்துத்திறன் பெற்றிருக்க வேண்டும். 01.06.2026 அன்றைய தேதிப்படி 30–50 வயதுக்குள் இருக்க வேண்டும்.

A Grade – ரூ.2000/– மற்றும் B Grade – ரூ. 1500/– (ஒரு நாள் பயிற்சிக்கான மதிப்பூதியம்) (ஒரு மாதத்திற்கு அதிகபட்சம் 15 நாட்கள் மட்டும் பணி). தகவல் தொடர்புத்திறன் ஒருங்கிணைப்புத்திறன் மற்றும் பிறருடன் பழகும் திறன் ஆகியவற்றைக் கொண்டி ருத்தல், மேலும் மொபைல் செயலிகள் Word மற்றும் Execl வலைதளங்களைக் கையாள்வதில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். இப்பணி முற்றிலும் தற்காலிகமானது. விண்ணப்பங்கள் நேரில் வழங்க வேண்டிய முகவரி மற்றும் தேர்வு நடைபெறும் இடம் : திட்ட இயக்குநர் / இணை இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தேனி ஒருங்கிணைந்த அலு வலக வளாகம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை தரைத்தளம், தேனி என்ற முகவரிக்கு 17.11.2026 மாலை 5.30 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். இதற்கு பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. மே லும், இதுதொடர்பான கூடுதல் விபரங்களுக்கு மகளிர் திட்ட அலுவலகத்தில் பணி நாட்களில் மட்டும் மாலை 6.00 மணிக்குள் விபரம் பெற்றி டலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வ.சிவகிருஷ்ணமூர்த்தி, தெரிவித்துள்ளார்.

பள்ளிக்கல்வித்துறையில் 6 இயக்குநர்கள் பணியிட மாற்றம் - தமிழக அரசு உத்தரவு!

சென்னை, நவ. 13–

பள்ளிக்கல்வி இயக்குநராக நரேஷ், தொடக்கக்கல்வி இயக்குநராக சசிகலா, ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி கூடுதல் திட்ட இயக்குநராக இராமேஸ்வரமுருகன், தனியார் பள்ளிகள் இயக்குநராக பழனிச்சாமி, ஆசிரியர் தேர்வு வாரிய செயலாளராக சுகன்யா, அரசு தேர்வுகள் இயக்குநராக எஸ். உமா ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.



இஸ்மாயில் லக்கி �டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



இன்றைய கார்ட்டூன்



திருச்செந்தூர் சூரசம்ஹார விழா: பாதுகாப்பு பணியில் 4 ஆயிரம் போலீசார்...!



திருச்செந்தூர், நவ. 13–

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் கந்தசஷ்டி விழா சூரசம்ஹார நிகழ்ச்சியின் போது 4 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படுவர் என்று மாவட்ட கலெக்டர் விஷ்ணுமகாஜன் கூறினார். இது குறித்து அவர் நிருபர்களிடம் கூறியதாவது:–


திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி கோவில் கந்தசஷ்டி விழாவை முன்னிட்டு வருகிற 15–ந் தேதி சூரசம்ஹாரம் நடக்கிறது. இதில் சுமார் 10 லட்சம் பேர் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவர்களுக்கு தேவையான குடிநீர், கழிப்பறை வசதி, சாலை மற்றும் போக்குவரத்து வசதிகள் குறித்து சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுடன் இணைந்து ஆய்வு செய்து, அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. பக்தர்களின் வசதிக்காக சுமார் 300 தற்காலிக கழிப்பறைகள் அமைக்கப்பட்டு உள்ளன. கோவில் வளாகம் மற்றும் பக்தர்கள் அதிகம் கூடும் பகுதிகளில் விரதம் இருந்து வரும் பக்தர்களுக்கு வசதியாக 11 இடங்களில் பந்தல்கள் அமைக்கப்பட்டு உள்ளன.

நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வரும் வாகனங்களை நிறுத்துவதற்காக 3 இடங்களில் வாகன நிறுத்தும் இடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளன. பக்தர்கள் வசதிக்காக கடந்த ஆண்டை விட 10 சதவீதம் கூடுதல் பஸ்கள் இயக்கப்பட உள்ளன. பக்தர்களுக்கு ஏதேனும் குறைகள் அல்லது உதவிகள் தேவைப்பட்டால் தெரிவிப்பதற்காக 18004252077 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் அறிவிக்கப்பட்டு உள்ளது. மக்களுக்கு எந்த உதவிகள் எந்த இடத்தில் கிடைக்கும் என்பதை அறியும் வகையில் வரைபடமும் வைக்கப்பட்டு உள்ளன. கியூஆர் கோடு ஸ்கேன் செய்வதன் மூலம் அதிகாரிகளை தொடர்பு கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

திருச்செந்தூர் கோவில் மற்றும் அதைச் சுற்றி உள்ள பகுதிகளில் திருவிழா காலங்களில் அதிக அளவில் மக்கள் கூடுவதால் செல்போன் நெட்வொர்க் பிரச்சினை ஏற்பட வாய்ப்பு உள்ளது. இதனைத் தவிர்க்கும் வகையில் பி.எஸ்.என்.எல் நிறுவனம் சார்பில் இரண்டு கூடுதல் கோபுரங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

சூரசம்ஹார நிகழ்ச்சியின் போது அசம்பாவிதங்கள் ஏற்படாமல் தடுக்க விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன. இதற்காக சுமார் 4 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர். பக்தர்கள் பாதுகாப்பாக வந்து செல்வதற்கும். கூட்ட நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.



கவுரவ விரிவுரையாளர்களுக்கு ஊதிய உயர்வு!



சென்னை, நவ. 13–

தமிழக சட்டசபையில் உயர் கல்வித்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது, அரசு கலை அறிவியல் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் பணிபுரியும் கவுரவ விரிவுரையாளர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர தொகுப்பூதியம் ரூ.30 ஆயிரத்தில் இருந்து ரூ.35 ஆயிரமாக உயர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதேபோல், அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் பணிபுரியும் கவுரவ விரிவுரையாளர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர தொகுப்பூதியம் ரூ.25 ஆயிரத்தில் இருந்து ரூ.30 ஆயிரமாக உயர்த்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பை செயல்படுத்தும் வகையில் தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. அதன்படி, உயர்த்தப்பட்ட தொகுப்பூதியம் கடந்த நவம்பர் 1–ந்தேதி முதல் அமலுக்கு வருகிறது.

இதன் மூலம் அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் பணிபுரியும் 8,741 கவுரவ விரிவுரையாளர்களும், பொறியியல் கல்லூரிகளில் பணிபுரியும் 319 தற்காலிக கவுரவ விரிவுரையாளர்களும் பயன் பெறுவார்கள்.

இதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறைக்கு அரசு உத்தரவிட்டுள்ளது.

வங்கிக் கணக்கு இல்லாதவரும் ரூ.50 ஆயிரம் வரை பணம் அனுப்பலாம்: ரிசர்வ் வங்கி!



சென்னை, நவ. 13–

வங்கிக் கணக்கு இல்லாதவர்களும் இனி வங்கிக் கிளைக்கு நேரில் சென்று, ரொக்கமாக பணத்தை செலுத்தி மற்றொருவரின் வங்கிக் கணக்குக்கு பணம் அனுப்ப முடியும். இதற்கான விதிமுறைகளை ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி, வங்கிக் கிளைக்கு நேரில் வரும் ஒருவர், ஒரு பரிமாற்றத்துக்கு அதிகபட்சம் ரூ.50 ஆயிரம் வரை ரொக்கமாக செலுத்தி, 'நெப்ட்' முறையில் மற்றொரு வங்கிக் கணக்குக்கு பணம் அனுப்பலாம். இதற்காக பணம் அனுப்புபவரின் அடையாளத்தை வங்கி சரிபார்க்க வேண்டும். அவருடைய செல்போன் எண் உள்ளிட்ட விவரங்களையும் பதிவு செய்ய வேண்டும்.

பணப் பரிமாற்றம் முடிந்ததும் அதற்கான தகவல் குறுஞ்செய்தியாக அனுப்பப்படும். இந்த வசதியை பயன்படுத்துபவர்களின் பரிமாற்றங்களை வங்கிகள் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். சந்தேகத்திற்குரிய பரிமாற்றங்கள் இருந்தால் அவற்றை உடனடியாக ஆய்வு செய்ய வேண்டும் என்றும் ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

சினிமா துளிகள்..!

அனிருத்-காவ்யா திருமணம்: ₹100 கோடி செலவா?



கிரீஸ் கொண்டாட்டம் முதல் சென்னை வரவேற்பு வரை... கவனம் ஈர்க்கும் திருமண ஏற்பாடுகள்!

இசையமைப்பாளர் அனிருத் ரவிச்சந்தர்காவ்யா மாறன் திருமணத்தை ஒட்டி, கிரீஸில் நடைபெற்றதாகக் கூறப்படும் கொண்டாட்டங்களும் ஆடம்பர ஏற்பாடுகளும் பேசுபொருளாகியுள்ளன.

கிரீஸில் நவம்பர் 10 அன்று இருவருக்கும் நிச்சயதார்த்தம் நடைபெற்றதாகவும், அதைத் தொடர்ந்து திருமணம் நடைபெறவுள்ளதாகவும் என்.டி.டி.வி. செய்தி வெளியிட்டுள்ளது.

இதனிடையே, சொகுசு விடுதி, தனி விமானங்கள், விருந்தினர் தங்குமிடம் மற்றும் விருந்து உள்ளிட்ட ஏற்பாடுகளுக்காக ₹100 கோடிக்கும் மேல் செலவாகியிருக்கலாம் எனச் சில செய்திகள் தெரிவிக்கின்றன. எனினும், இந்தத் தொகையை உறுதிப்படுத்தும் அதிகாரப்பூர்வ செலவு விவரங்கள் வெளியாகவில்லை. விடுதி அறைக் கட்டணம் மற்றும் விமானங்களின் எண்ணிக்கை போன்ற தகவல்களும் உறுதிப்படுத்தப்படவில்லை.

இவர்களது திருமண வரவேற்பு நவம்பர் 21 அன்று சென்னையில் நடைபெறவுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. தெலங்கானா முதலமைச்சர் அலுவலகத்தின் தகவலை மேற்கோள் காட்டியும் இந்தத் தேதி தெரிவிக்கப்பட்டுள்ளது. திருமணத்தைச் சுற்றியுள்ள எதிர்பார்ப்பு அதிகரித்துள்ள நிலையில், செலவு மற்றும் விருந்தினர் வருகை குறித்த முழுமையான விவரங்களுக்கு அதிகாரப்பூர்வ அறிவிப்பே தெளிவளிக்கும்.

தமிழகத்தில் ஒரு அரசு பள்ளி கூட மூட விட மாட்டோம்
பள்ளிக்கல்வி அமைச்சர் ராஜ்மோகன் உறுதி!



வேலூர், நவ. 13–

மாணவர் சேர்க்கை குறைவு காரணங்களுக்காக ஒரு அரசு பள்ளியை கூட மூட மாட்டோம் என்று தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் உறுதிபட தெரிவித்தார். வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய 4 மாவட்டங்களில் 2023–24, 2024–25 மற்றும் 2025–26–ம் ஆண்டுகளில் பொதுத் தேர்வுகளில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 100 சதவீத தேர்ச்சி பெற்ற பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்குப் பாராட்டு விழா இன்று நடைபெற்றது. விஐடி வேந்தர் கோ. விசுவநாதன் தலைமையில் நடைபெறும் பாராட்டுவிழாவில்தமிழகபள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு தலைமை ஆசிரியர்களுக்கு பாராட்டு சான்றிதழை வழங்கினார். இதில் 100–க்கு 100 சதவீதம் தேர்ச்சி பெற்ற 341 அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளை சேர்ந்த தலைமை ஆசிரியர்களுக்கு ரூ.52 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. இதில் அமைச்சர் ராஜ்மோகன் பேசியது: நாடு முழுவதும் கடந்த 10 ஆண்டு காலங்களில் 94000 பள்ளிகள் மூடப்பட்டுள்ளதாக, விஐடி வேந்தர் கோ. விசுவநாதன் பேசும்போது குறிப்பிட்டார்.

தமிழகத்தில் 200–க்கும் மேற்பட்ட பள்ளிகள் மூடப்பட்டுள்ளன என்பது உண்மை. தவெக அரசு பொறுப்பேற்று 6 மாதங்களில் ஒரு அரசு பள்ளி கூட மூடப்படவில்லை. மாணவர் சேர்க்கை குறைந்த அரசு பள்ளிகளை தவெக அரசு மூட மாட்டோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மூலை, முடுக்கு, மலைச் சிகரங்களில் மனிதக் காலடி படுவதற்கே சங்கடப்படக்கூடிய முடுக்குகளில் யாரோ ஒரு ஏழை வீட்டுக் குழந்தையும் படிக்க வேண்டும் என்பதற்காக ஒற்றை ஆசிரியரை வைத்துக்கொண்டு ஒரு பள்ளிக்கூடம் காத்திருக்கிறது. ஒரு மாணவனுக்காக அந்த அரசுப் பள்ளிகளை நாங்கள் மூட மாட்டோம்; மூட விட மாட்டோம். அதற்கு பதிலாக மாணவர் சேர்க்கையை அதிகரிக்க அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அனைத்து குழந்தைகளும் வெற்றி பெற வேண்டும் என நினைப்பது ஆசிரியர் தான். கற்றலில் புதிய அணுகுமுறைகளை புகுத்தி வருகிறோம். கல்வியை நோக்கி, மாணவர்கள் என்ற நிலையில் இருந்து மாணவர்களை நோக்கி கல்வி என்ற நிலைக்கு கல்வியை நகர்த்தி வருகிறோம். கதைகள் வழியாக கணிதம் கற்று தருகிறோம். மாணவர்களுக்கு கற்றலை மேம்படுத்த பாடத்திட்டத்தை மேம்படுத்தி வருகிறோம். கல்வித்துறை என்பது முன் எப்போதும் இல்லாத அளவுக்கு மாணவரகளை நோக்கி ஆசிரியர்களுக்கு தேவைப்படுகிற அங்கீகாரத்தை நோக்கி தனியார் பள்ளிகளை விட கற்றல் வழியே மகிழ்ச்சி அடைவதில் சந்தோஷமான குழந்தைகளை அரசு பள்ளிகள் உருவாக்கி வருகின்றன.

நடப்பாண்டில் பள்ளிக்கல்விக்காக ரூ.44,557 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பள்ளி நிறைவு திட்டத்தின் கீழ் 3734 அரசு பள்ளிகளை மேம்படுத்தப் படுத்த 2132 கோடி மதிப்பில் திட்டமிடப்பட்டுள்ளது. 10000 அரசு பள்ளிகளில் தூய்மை குடிநீர், கழிப்பறை பராமரிப்பு மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்த சூப்பர் கிளீன், சூப்பர் கேம்பஸ் திட்டத்துக்காக ரூ.139 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. விஐடி வேந்தர் கோ.விசுவநாதன் பேசியது: பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்பு (ஒஇசிடி) நாடுகள் நடத்திய சர்வதே மாணவர் மதிப்பீட்டு தர வரிசையில் இந்தியா 2009–ல் கலந்து கொண்டது. இதில் 73 நாடுகள் பங்கேற்றன.

இந்தியா 72–வது இடம் பிடித்தது. இந்த மாணவர் தர வரிசை போட்டியில் இந்தியா பங்கேற்பது இல்லை. அந்தப் போட்டியில் பங்கேற்கும் சூழலை உருவாக்க வேண்டும். அரசு பள்ளிகளில் எண்ணிக்கையிலே அதிகம் இருந்தாலும் தரத்தையும் உயர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கையை தமிழக அரசு எடுக்க வேண்டும். இலவச கட்டாய கல்வி உரிமை சட்டத்தில் மாணவர்களை தேர்ச்சி பெற வைக்கிறோம். இது எந்த அளவுக்கு கல்வியின் தரத்தைப் பாதிக்கிறது என்பதை ஆராய குழு அமைக்க வேண்டும். அந்த குழு இது சரியானதா, மறுபரிசீலனை செய்ய வேண்டுமா என்பதை பார்க்க வேண்டும். கடந்த 10 ஆண்டு காலத்தில் இந்தியா முழுவதும் 94000 அரசு பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. தனியார் பள்ளிகள் 51,000 பள்ளிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. தமிழநாட்டிலும் அதே நிலைமைதான். 246 பள்ளிகள் மூடப்பட்டிருக்கின்றன. அதற்கு காரணம் மாணவர்கள் இல்லாததுதான். 1,204 பள்ளிகளில் மாணவர் சேர்க்கை இல்லை. அரசு பள்ளிகளையும் தனியார் பள்ளிக்கு சமமாக செய்ய வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும் என்பதை அமைச்சர் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தியாவில் ஆண்டுதோறும் 1,260 மணி நேரம் பள்ளி நேரமாக உள்ளது. தென் கொரியாவில் 2,640 மணி நேரம். சீனாவில் 2,940 மணி நேரம் பள்ளிகள் நடைபெறுகின்றன. சீனா, கொரியா, ஜப்பான், சிங்கப்பூர், பின்லாந்து நாடுகள் கல்விக்கு அதிகம் முக்கியத்துவம் தருகின்றன. அந்த நாடுகளோடு போட்டி போடுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை ஒரு குழு அனுப்பி ஆய்வு செய்திட வேண்டும்.

அரசு பள்ளி மாணவர்களுக்கு இலவச கல்வி வழங்கும் ஸ்டார்ஸ் திட்டத்தை அடுத்த ஆண்டு முதல் இந்தியா முழுவதும் விரிவுப்படுத்த உள்ளோம். அதேபோல அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை மூலம் வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் ஏழை எளிய மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கி வருகிறோம். மத்திய அரசு கல்விக்கு கூடுதலாக செலவிட வேண்டும். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 சதவீத அளவுக்கு கல்விக்கு செலவிட வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். விழாவில் நிலையான கிராமப்புற மேம்பாடு மற்றும் ஆய்வு மையத்தின் (சிஎஸ்ஆர்டி–ஆர்எஸ்) இயக்குநர் சுந்தரராஜன் வரவேற்றார். விழாவில் விஐடி துணைத் தலைவர்கள் சங்கர் விசுவநாதன், சேகர் விசுவநாதன் மற்றும் ரமணி பாலசுந்தரம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தவெக எம்எல்ஏ–க்கள் சுதாகர், வினோத்கண்ணன், தென்றல் குமார், சிந்து மற்றும் அதிமுக எம்எல்ஏ–க்கள் சுகுமார் மற்றும் வேல் அழகன், வேலூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பிரேமலதா ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெற்றி நமதே நிகழ்ச்சி தொடக்கம்



வேலூர், நவ. 13-

பிளஸ்–2 மாணவர்களுக்கான வெற்றி நமதே நிகழ்ச்சியை விஐடி பல்கலைக்கழக வேந்தர் ஜி.விஸ்வநாதன் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020